


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)

## NOVEMBER

*We Are Here..!! To Guide You..!!*



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## நவம்பர் - 16.11.2018

Main Office @

**Weshine Study Circle**

Chromepet, Chennai

Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- அறிவியல் & தொழில்நுட்பம்
- விருதுகள்
- நியமனங்கள்
- முக்கிய தினங்கள்












# இந்திய நிகழ்வுகள்

- புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் அமைச்சகமானது இந்திய காற்று சுழலி சான்றிதழ் திட்டம் **(Indian wind Turbine certification scheme- IWTCS)** என்ற புதிய திட்டத்தின் வரைவை தயார் செய்துள்ளது.
  - இது சென்னையில் உள்ள தேசிய காற்று சக்திக்கான நிறுவனத்துடன் கலந்து ஆலோசிக்கப்பட்டு தயார் செய்யப்பட்டுள்ளது.

- ஐ.நா. அவை ஆதரவுடன் இந்தியா - ரஷ்யா இடையேயான கூட்டு இராணுவப் பயிற்சியான இந்த்ரா – 2018 **(Exercise INDRA- 2018),** உத்திரப் பிரதேச மாநிலத்தில் உள்ள பாபினா இராணுவ முகாம் துப்பாக்கிச் சுடும் பயிற்சித் தடலில் **(Babina Military Station)** நவம்பர் 18 முதல் நடைபெறவுள்ளது.
  - இந்தியா, ரஷ்யா கூட்டு இராணுவப் பயிற்சி, இந்த்ரா பயிற்சி, வரிசையில் பத்தாவது பயிற்சி இதுவாகும். இரஷ்யா கூட்டமைப்பின் ஐந்தாவது இராணுவப் படைப் பிரிவும், இந்தியாவின் ஆயுதம் தாங்கிய காலாட்படைப் பிரிவும் இப்பயிற்சியில் பங்கேற்க உள்ளன.

We Shine Academy TM

# உலக நிகழ்வுகள்

- **சமுத்திர சக்தி-(கடற்பயிற்சி)** - **இந்தியா மற்றும் இந்தோனேசியா** நாடுகளுக்கிடையேயான உறவுகளை வலுப்படுத்தவும், கடல்சார் ஒத்துழைப்பை விரிவுபடுத்தவும், இயங்குதிறனை மேம்படுத்தவும் சிறந்த நடைமுறைகளை பரிமாற்றம் செய்வதையும் நோக்கமாகக் கொண்ட இருதரப்பு கடற்படை பயிற்சியான சமுத்திர சக்தியின் முதல் பதிப்பு இந்தோனேசியாவின் சூரபயா துறைமுகத்தில் நடைபெற்றுள்ளது.
  - இந்தியாவின் சார்பில், விசாகப்பட்டினத்தில் உள்ள கிழக்கு கடற்படையின் **“INS ராணா”** என்ற கப்பல் பங்குபெற்றது.

- சீனாவின் அரசு செய்தி நிறுவனம் சின்குவா **(Xinhua)** சமீபத்தில் உலகின் முதலாவது செயற்கை நுண்ணறிவு **(Artificial Intelligence)** செய்தி அறிவிப்பாளரை, **Wuzhen** மாகாணத்தில்

நடைபெறும் 5வது உலக இணைய மாநாட்டில் அறிமுகப்படுத்தியுள்ளது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- சூரியனுக்கு அருகில், **‘சூப்பர் பூமி’** ஒன்றை விண்ணியல் அறிஞர்கள் கண்டுபிடித்துள்ளனர். இது சூரியனுக்கு மிக அருகில் உள்ள சிறிய நட்சத்திரமாகும். இந்த நட்சத்திரத்திற்கு **“பர்நார்ட் நட்சத்திரம் பி”** எனப் பெயரிடப்பட்டுள்ளது. இது சூப்பர் பூமி எனவும் அழைக்கப்படுகிறது.
  - இந்நட்சத்திரத்தை ஒரு கிரகம் ஒன்று சுற்றி வருவதாக கண்டறியப்பட்டுள்ளது. இது பூமியை போன்று 3.2 மடங்கு பெரியது. இக்கிரமானது “பர்நார்ட் நட்சத்திரம் பி”-யை 233 நாட்களுக்கு ஒருமுறை சுற்றி வருகிறது.

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையமானது(**ISRO**) ஜி சாட் - 29 (**GSAT - 29**) என்ற உயர்தர இணைய வசதிக்கான தகவல் தொடர்பு செயற்கைக்கோளை, அதிக எடையை தாங்கிச் செல்லக் கூடிய ஜி.எஸ்.எல்.வி- மார்க் 3 – டி2 **(GSLV – Mark III – D2)** என்னும் ராக்கெட் மூலம் நவம்பர் 14 அன்று விண்ணில் செலுத்தியுள்ளது.
  - GSLV – mark III – ஐந்தாம் தலைமுறைக்கான ராக்கெட் ஆகும். இஸ்ரோ இதுவரை GSLV வரிசையில் 12 ராக்கெட்களை செலுத்தியுள்ளது.

## விருதுகள்

- இந்தியாவைச் சேர்ந்த பகுதிநேரப் பத்திரிக்கையாளரான **சுவாதி சதுர்வேதி 2018ம்** ஆண்டின் துணிவிற்கான இலண்டன் பத்திரிக்கை சுதந்திர விருதை பெற்றுள்ளார்.
  - பாரீசை மையமாகக் கொண்ட **Reporters Sons Frontier (RSF)** அல்லது எல்லைகளற்ற செய்தியாளர்கள் என்ற அமைப்பின் லண்டன் பிரிவினால் இவ்விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- **குறிப்பு**
  - சுவாதி சதுர்வேதி ‘I am a Troll: Inside the secret world of the

BJP’s digital Army’ என்ற புத்தகத்தை எழுதியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## நியமனங்கள்

- இந்திய தடகள வீராங்கனை **ஹீமா தாசை**, யுனிசெப் இந்திய (**UNICEF**) அமைப்பு **இந்திய இளையோரின் தூதராக** நியமித்துள்ளது. உலக U-20 தடகள சாம்பியன் ஷிப் தொடரின் மகளிர் 400 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் சாம்பியன் பட்டம் வென்ற ஹீமா தாஸ், உலக அளவிலான தடகள போட்டியின் ஓட்டப் பந்தயத்தில் தங்கப் பதக்கம் வென்ற முதல் இந்திய வீராங்கனை என்ற சாதனையை படைத்துள்ளார்.
- **குறிப்பு**
  - இந்திய அரசு 2018ம் ஆண்டிற்கான அர்ஜுனா விருது வழங்கியது குறிப்பிடத்தக்கது.

## முக்கிய தினங்கள்

- **உலக நுண்ணுயிர் எதிர்பொருள் விழிப்புணர்வு வாரம் - நவம்பர் 12 – நவம்பர் 18.**
  - நுண்ணுயிர் எதிர்பொருட்களின் எதிர்ப்பு பற்றி உலகளாவிய விழிப்புணர்வை அதிகரிக்கவும் பொதுமக்களிடையே சிறந்த நடைமுறைகளை ஊக்குவிக்கவும், ஆண்டுதோறும் நவம்பர் 12 முதல் 18 வரை உலக நுண்ணுயிர் எதிர்பொருள் விழிப்புணர்வு வாரமாக அனுசரிக்கப்படுகிறது.
  - 2018ம் ஆண்டின் நுண்ணுயிர் எதிர்பொருட்கள் விழிப்புணர்வு வாரத்தின் கருத்துருவானது, “தனிப்பட்ட முன்னுரிமைகளை பிரதிபலிக்கும் வகையில் நாடுகளுக்கு அதிக நெகிழ்வு தன்மை”-யை வழங்குவதாகும்.